# திருப்பூர் மாநகராட்சி

**2021 மே மாதம் 07-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 01முதல் 08 வரை**

**13-05-2021-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 09 முதல் 12 வரை**

**28-05-2021-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 13 முதல் 19 வரை**

# திருப்பூர் மாநகராட்சி

**2021ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**01)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4, வார்டு எண்.52, 53 மற்றும் 54-க்குட்பட்ட கருப்பகவுண்டம்பாளையம் தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி, திருக்குமரன் நகர் நடுநிலைப் பள்ளி, ஜனசக்தி நகர் தொடக்கப்பள்ளி, பழவஞ்சிபாளையம் நடுநிலைப் பள்ளி, வீரபாண்டி தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி குப்பாண்டம்பாளையம் நடுநிலைப் பள்ளி, பாரதி நகர் நடுநிலைப் பள்ளிகளில் வாக்குப் பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளிகளில் உள்ள வாக்குப் பதிவு மையங்களில் மின்விசிறிகள், மின்விளக்குகள், சாய்வுதளம் மற்றும் சாய்வுதள கைப்பிடி மற்றும் தடுப்பு அமைக்கும் பணிக்கு ரூ. 8.30 இலட்சத்திற்கு சட்டம் விதியின் 15-ன் கீழ் நிர்வாக அனுமதி 24-03-2021 அன்று பெறப்பட்டு 25-03-2021 அன்று மாலை 3.00 மணி வரை விலைப்புள்ளிகளில் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு விபரம் பின்வருமாறு உள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | Unit | **K.Kuppuchamy** | **Raja Construction** | **Senthil Concstruction** |
|---|---|---|---|---|---|
| 1. | Earthwork excavation for foundation in all soils and sub soils except in hard rock requiring blasting and depositing on bank with initial lead of 10m and initial lift of 2m inclusive of shoring, shuttering, bailing out water wherever necessary, refilling the foundation with excavated earth other than sandy soil in layers of not more than 150mm thick layers well rammed and depositing the surplus earth within the compound in place shown by the departmental officers and clearing and levelling the site etc,. complete. | 1M3 | 110.00 | 115.00 | 120.00 |
| 2. | Plain Cement concrete in 1:5:10 [one cement, five sand and ten course aggregate] using 40mm size Hard Broken/Machine crushed Granite Stone Jelly including dewatering if found necessary and laid in layers of not more than 15cm thick and compacted etc., complete complying with standard specification. | 1M3 | 4000.00 | 4020.00 | 4050.00 |
| 3 | Random rubble masonry in CM 1:5 [one cement and five sand] for foundation and basement using best new rough and bond stones including simultaneous pointing above ground level with the same mortar etc., complete complying with standard specification. | 1M3 | 4367.00 | 4400.00 | 4450.00 |

| வ. எண். | பணியின் விபரம் | Unit | K.Kuppuchamy | Raja Construction | Senthil Concstruction |
|---|---|---|---|---|---|
| 4 | Supplying and filling Well gravel in layers of not more than 15cm thick well rammed, watered and compacted etc., complete complying with standard specification. | 1M3 | 354.00 | 360.00 | 380.00 |
| 5 | Plastering with cement mortar 1:4 mix, 20mm thick in all floors using clean screened sand and including cost of curing for fifteen days from the completion of the work and surface should free from undulations and including the cost of preparing the surface for plastering and protecting from other damages till setting of mortar etc., complete complying with standard specification. | 1M2 | 413.00 | 420.00 | 440.00 |
| 6 | Plastering with cement mortar 1:5 mix, 12mm thick in all floors using clean screened sand and including cost of curing for fifteen days from the completion of the work and surface should free from undulations and including the cost of preparing the surface for plastering and protecting from other damages till setting of mortar etc., complete complying with standard specification. | 1M2 | 202.00 | 210.00 | 230.00 |
| 7 | Wiring with 2x1.5 sq.mm. (22/0.3) PVC insulated single core unsheathed copper conductor cable of 1100V grade insuitable heavy gauge MS conduit pipe on wall and ceiling with MS accessories with 150mm x100mm x 75mm MS switch box for 5A3pin non interlocking flush type CS plug with painting of suitable colour with continuous earth wire connection of 14 SWG TC wire for open plug point (SD -10) | 1M2 | 1283.00 | 1300.00 | 1350.00 |
| 8 | Wiring with 2x1.5 sq.mm. (22/0.3) PVC insulated SC unsheathed copper conductor of 1100V grade in suitable PVC rigid pipe on wall and ceiling with PVC accessories and with TW switch box and 5A FT switch with painting of suitable colour for open PVC light point / fan point (for electronic regulator) (5 points per coil) (SD -18) | 1No | 1188.00 | 1200.00 | 1250.00 |
| 9 | Supply and run of 2 of 4 Sq.mm (56/0.3) PVC insulated SC unsheathed copper conductor of 1100V grade in suitable PVC rigid pipe on wall and ceiling with continous earth connection of 14 SWG TC wire with painting of suitable colour ( SD No. 56) | 1Rm | 172.00 | 175.00 | 195.00 |
| 10 | Supply and run of 2 of 1.5 sq.mm. (22/0.3) PVC insulated SC unsheathed copper conductor of 1100V grade insuitable PVC rigid pipe on wall and ceiling with continuous earth wire connection 14 SWG TC wire with painting of suitable colour ( SD No. 54) | 1Rm | 126.00 | 130.00 | 140.00 |

| வ. எண். | பணியின் விபரம் | Unit | K.Kuppuchamy | Raja Construction | Senthil Concstruction |
|---|---|---|---|---|---|
| 11 | Supply and fixing of single box type 4'40 W fluorescent fitting complete with copper choke and condensor with TW round blocks on wall or ceiling with flu tube with PVC unsheathed copper leads from terminals to the fitting (SD - 88) | 1No | 570.00 | 570.00 | 580.00 |
| 12 | Supply and fixing of 1200mm (48") AC ceiling fan complete with stepped electronic 300 W regulator with 1 meter down rod on the existing clamp ( SD No. 107) | 1No | 1900.00 | 1950.00 | 2000.00 |
| 13 | Supply and Delivery of 2" (50mm) dia G.I. Pipes with ISI specification as directed by the departmental officers including cost and conveyance the same to the departmental store etc., complete as per standard specifications. | 1M | 369.00 | 375.00 | 390.00 |
| 14 | Supplying and fixing in position of Aluminium anodised partition with 62x38x2mm extruded box section at bottom, vertical and horizontal members. The vertical members are spaced at 90cm c/c and to horizontal members are spaced at 1.20m, 2.10m and 2.40m height and the bottom panels should be covered with 12mm thick PLB exterior grade and the top and middle panels should be fixed at 4mm thick clear glass with necessary glassing clips, rubber beadings etc., including cost of labour for electrical consumption required for the fabrication, drilling holes in RCC columns with power drill to the required extent and make good to the original condition etc., complete and as directed by the departmental officers. The aluminium for frame to be anodised with matt finish under electrically controlled condition in accordance with ISI 1868/1962 specification for an average anodic film thickness of not less than 15 microns. | 1M | 2742.00 | 2750.00 | 2800.00 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் கே. குப்புசாமி அவர்களின் விலைப்புள்ளியை மாநகராட்சி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு ஏற்கலாம். மேலும் மாமன்றத்தில் பதிவு செய்ய பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. அனுமதி வழங்கலாம்.
2. இப்பணியின் அவசர அவசியம் கருதியும் சட்டவிதி 15 பணியாக உள்ளதால் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் பணி ஆணை வழங்கியதை ஏற்கலாம்.

(இ.1 / 1147 / 2021 / ம.4)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**02)** திருப்பூர் மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.ஏ. ராமகிருஷ்ணன் என்பவரை திருப்பூர் மாநகராட்சியில் நிரந்தரமாக துப்புரவு ஆய்வாளராக ஈர்த்துக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ள 22-02-2021ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( மாந6) துறையின் 78ம் எண்ணிட்ட அரசாணை (ப) மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாமன்றம் பதிவு செய்யலாம். ( சி.1/1593/2021)

--------

**தீர்மானம் :பதிவு செய்யப்பட்டது**.

-------

**03)** திடக்கழிவு மேலாண்மை பணியில் வார்டு எண்.16முதல்45 வரை (மண்டலம் -2 மற்றும் 3) பகுதிகளில் வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், பிரித்தெடுத்தல், மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் இடத்திற்கு கொண்டு செல்லுதல் மற்றும் வடிகால்வாய்களை சுத்தம் செய்தல் போன்ற பணிகளை தனியார் மையம் மூலம் மேற்கொள்ளப்பட 12-08-2013ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மாமன்றத் தீர்மான எண்.548, நாள் 30-08-2013-ல் திருவாளர்.ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஸ்மென்ட் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்களுக்கு பணி உத்திரவு 02-09-2013-ல் வழங்கப்பட்டு அதன் பேரில் கடந்த 02-02-2014 முதல் பணி நடைபெற்று வருகிறது. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி மூன்றாண்டுகள் இந்த ஒப்பந்தப்புள்ளி மூலமே பணியினை மேற்கொள்ள 02-02-2015 முதல் 01-02-2017-mம் ஆண்டு வரை நீடிப்பு செய்யப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை எண்.2.7ன்படி ஒப்பந்தக் காலத்தை நீடிப்பு செய்யலாம். எனவே மாமன்றத்தீர்மான எண். 182, நாள் 22-12-2017-ல் 01-02-2018 முதல் 31-01-2020 வரை நீடிப்பு செய்ய அனுமதி அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது. தற்போது மண்டலம் எண்.2 மற்றும் 3 வார்டு எண்கள் 22, 23, 24, 25, 26, 27, 28, 30, 31, 34, 38, 39, 40, 42, 44 மற்றும் 45 ஆகிய 16 வார்டுகளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி 01-02-2020 முதல் 31-07-2020 ஆம் தேதி வரை ஆறு மாதத்திற்கு இந்த ஒப்பந்ததாரர் மூலமே இப்பணியினை மேற்கொள்வதற்கு மாமன்றத் திர்மான எண். 867 நாள் 05-02-2020-ல் அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது.

18-03-2020 ஆம் நாளன்று கோவிட்-19 வைரஸ் தொற்று குறித்து தேசிய பேரிடராக மத்திய அரசு அறிவித்துள்ளது. மேலும் கொரோனா தொற்று அதிக அளவில் பரவி வருவதால் நோய் தொற்றை தடுக்கும் வகையில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர இயலாததால் பொது சுகாதார நலன் கருதி திடக்கழிவு மேலாண்மை பணி அத்தியாவசிய பணியாக இருப்பதால் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு பணியினை அவசியம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேலும் நோய் தொற்று பரவுதல் காரணமாக அரசு விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கு காரணமாக (கோவிட்-19) ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தத்தின் அதே விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள அதே நிறுவன ஒப்பந்ததாரருக்கு, நிபந்தனை எண். 7.6.2-ன்படி ஒவ்வொரு ஆண்டும் 10 சதவீத உயர்வுடன் ஒரு நாளைக்கு 180 மெ.டன் வீதம் மாதந்தோறும் வழங்க வேண்டும் என்பதாலும் ஒப்பந்தத்தினை அதே விலை விகிதத்தில் 01-08-2020 முதல் 31-10-2020 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த கால நீட்டிப்பு செய்ய மாமன்ற தீர்மானம் எண். 1096 நாள் 30-07-2020-ல் அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது. ஒப்பந்தப்புள்ளி கோர

**03-ன் தொடர்ச்சி**

கால அவகாசம் தேவைப்படுவதால் அதே ஒப்பந்ததாரருக்கு அதே விலை விகிதத்தில் மீண்டும் மூன்று மாத காலத்திற்கு 01-11-2020 முதல் 31-01-2021 வரை கால நீட்டிப்பு செய்து பணிநடைபெற்று வந்தது.

ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தத்தின் அதே விலைவிகிதத்தில் 16 வார்டுகளில் பணி மேற்கோள்ள அதே நிறுவன ஒப்பந்ததாரருக்கு, நிபந்தனை எண்.7.6.2-ன்படி ஒவ்வொரு ஆண்டும் 10சதவீத உயர்வுடன் மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2565/- லிருந்து உயர்வு செய்து ரூ.2821.50 வீதம் சராசரியாக ஒரு நாளைக்கு 180 மெ.டன் வீதம் மாதந்தோறும் வழங்க வேண்டும் என்பதாலும் ஒப்பந்தத்தினை அதே விலைவிகிதத்தில் 01-02-2021 முதல் 30-04-2021 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த கால நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்சமயம் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதாலும் கொரோனா நோய் தொற்று காலமாக உள்ளதாலும் மீண்டும் மூன்று மாத காலத்திற்கு 01-05-2021 முதல் 31-07-2021 வரை ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தத்தின் அதே விலைவிகிதத்தில் 16 வார்டுகளில் பணி மேற்கொள்ள அதே நிறுவன ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.4.50 கோடிக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) கொரோனோ நோய் பரவுதல் மற்றும் தேர்தல் விதிமுறைகள் நடைமுறையில் உள்ளதாலும், தற்போது ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத காரணத்தினாலும், அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு குப்பைகளை உடனுக்குடன் அகற்ற ஏற்கனவே 12-08-2013ம் தேதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் 01-05-2021 முதல் 31-07-2021 வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( இ1/6901 /2019)

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**04)**திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1, வார்டு எண்.14-க்குட்பட்ட சிறுபூலுவப்பட்டி அம்மன் திருமண மண்டபம் அருகில் காவல் ஆணையர் அலுவலகம் செல்லும் கிழமேல் சாலையில் 8 ' X 10 ' என்ற அளவில் ஸ்டீல் பூத் மூலம் ஆவின் பாலகம் வைத்து, பொது மக்களுக்கு ஆவின் பால் மற்றும் ஆவின் பொருட்கள் விற்பனை செய்திட அனுமதி வேண்டி, தலைவர், கே.1005 திருப்பூர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம் லிட்., 3 / 170 A குப்பாண்டம்பாளையம் வீரபாண்டி ( அஞ்சல்), திருப்பூர் -5 விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி ஆவின் பாலகம் அமைக்க உத்தேசித்து உள்ள இடமானது மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் மாநகராட்சிக்குச் சொந்தமான, சாலை ஓரத்தில் அமைகின்றது. பத்திரப் பதிவுத்துறை அலுவலகத்தின் வழிகாட்டு மதிப்பின்படி மேற்படி இடத்தில் ஆவின் பாலகம் 8 ' x 10 ' என்ற அளவில் நிறுவ ஒரு மாத வாடகை மதிப்பு ரூ.2020/- ( ரூபாய் இரண்டாயிரத்து இருபது மட்டும்) எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**04-ன் தொடர்ச்சி**

எனவே வார்டு எண்.14-க்குட்பட்ட சிறுபூலுவப்பட்டி அம்மன் திருமண மண்டபம் அருகில் காவல் ஆணையர் அலுவலகம் செல்லும் கிழமேல் சாலையில் 8' x 10' என்ற அளவில் ஸ்டீல் பூத் அமைத்து ஆவின் பால் மற்றும் ஆவின் பொருட்கள், போக்குவரத்திற்கு இடையூறு இல்லா வண்ணம், விற்பனை செய்ய மாத வாடகை மதிப்பு ரூ.2020/-க்கு திருவாளர்கள்.தலைவர், கே.1005 திருப்பூர் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கம் லிட்., 3/170 A, குப்பாண்டம்பாளையம், வீரபாண்டி ( அஞ்சல்) திருப்பூர் -5 என்பவருக்கு நிலவாடகை மதிப்பில் வழங்குவது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாநகராட்சிக்குச் சொந்தமான சாலையோரத்தில், போக்குவரத்திற்கு இடையூறின்றி 8 ' x 10 ' என்ற அளவில் ஸ்டீத் பூத் அமைத்து ஆவின் பாலகம் மாத வாடகை ரூ.2020/- அடிப்படையில் நடத்திக் கொள்ள அனுமதி வழங்கலாம்.

( அ1/670/2021/ம.எண்.1)

--------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-------

**05)** திருப்பூர் பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தலுக்கு 18-04-2019 முதல் 19-04-2019 மற்றும் 23-05-2019 முதல் 24-05-2019 வரையுள்ள நாட்களில் எல்.ஆர்.ஜி. கலைக்கல்லூரி வளாகத்தில் தேர்தல் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்படுத்த நடமாடும் தற்காலிக கழிவறைகளை வாடகை அடிப்படையில் அமர்த்திக் கொடுக்கப்பட்டதற்கு ஆணையர் /தனிஅலுவலர் அவர்களின் 11-04-2019-ந் தேதியில் ரூ.1,00,000/-க்கு செலவீனம் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டதில் அதில் ரூ.84,960/ மட்டும் Janani Associates, Coimbatore என்ற நிறுவனத்திற்கு 17-06-2019-ம் தேதியில் தொகையினை வழங்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.20371/ 2020 . இ.3, நாள் 18-01-2021ல் தெரிவித்துள்ளபடி திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் 15-08-2019ம் தேதியில் நடைபெற்ற இந்திய சுதந்திர தின விழாவிற்கு வருகை புரியும் அரசு அலுவலர்கள், பிரமுகர்கள் பயன்படுத்தும் வகையில் நடமாடும் தற்காலிக கழிவறைகளை அமைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்படி இடத்தில் தற்காலிக நடமாடும் கழிப்பறைகளை வாடகை அடிப்படையில் பயன்படுத்த ஏதுவாக 8 எண்ணிக்கையில் ஏற்பாடு செய்த வகையில் 1 கழிவறைக்கு ரூ.6000/- வீதம் மொத்த வாடகை தொகை ரூ.56,640/- ( இதர வரிகள் உட்பட) மற்றும் 26-01-2021ம் தேதியில் குடியரசு தினவிழாவின் போது மேற்படி கல்லூரியில் 6 எண்ணிக்கையில் நடமாடும் தற்காலிக கழிவறை ஏற்பாடு செய்த வகையில் 1 கழிவறைக்கு ரூ.7500/- வீதம் மொத்த வாடகை தொகை ரூ.53100/- (இதர வரிகள் உட்பட) ஆக மொத்தம் ரூ.109740/- ஐ Janani Associates, Coimbatore என்ற நிறுவனத்திற்கு வழங்க 1வது மண்டல சுகாதார அலுவலர் தனது 21-04-2021ந் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவுப்படி தற்போது 2019 சுதந்திர தினவிழா மற்றும் 2021 குடியரசு தின விழாவிற்கு நடமாடும் தற்காலிக கழிப்பறைகளை சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரியில் வாடகை அடிப்படையில் Janani Associates, Coimbatore என்ற நிறுவனம் மூலம் அமர்த்திக் கொடுக்கப்பட்ட வகையில் அதற்கான செலவீனத் தொகை ரூ.1,09,740/- ஐ வழங்க மாமன்றத்தின்

**05-ன் தொடர்ச்சி**

அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. 2019-ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்ட தற்காலிக நடமாடும் கழிவறைகளை வாடகை அடிப்படையில் தொகை ரூ.84,960/- வழங்கியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.
2. 2019ல் நடைபெற்ற சுதந்திர தினவிழா மற்றும் 2021 குடியரசு தின விழாவிற்கு நடமாடும் தற்காலிக கழிப்பறைகளுக்கு வாடகை தொகை ரூ.109740/-ஐ வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 2041 / 2019)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**06)** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் D.O.கடித எண்.1588/2015 / ஜே1 நாள் 15-06-2015, 28-03-2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் கடித ந.க.எண்.2571 / J 1 / 2017 நாள் 14-02-2017-ன்படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்ததீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே பார்வையில் கண்டுள்ள உத்திரவில் 300 குடும்பங்களுக்கு ஒரு கொசுதடுப்புபணியாளர் (DBC) வீதம் தற்காலிகமாக நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டு உள்ளது. இம்மாநகராட்சியில் 60 வார்டு பகுதிகளிலும் கொசு தடுப்பு பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும் தற்போது நோய் பரவாமல் கட்டுப்படுத்த தினமும் மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல் பெறப்பட்டு ஆறுநாள் வட்ட சுழற்சி அடிப்படையில் பணிபுரிய ஏதுவாக மண்டலம் ஒன்றிற்கு நாளொன்றுக்கு மண்டலம் 1ற்கு 75 நபர்கள், மண்டலம் 2ற்கு 75 நபர்கள், மண்டலம் 3ற்கு 75 நபர்கள், மண்டலம் 4ற்கு 75 நபர்கள், வீதம் நான்கு மண்டலங்களுக்கு தினசரி மொத்தம் 300 DBC பணியாளர்களை அவசர அவசியம் கருதி பொது சுகாதா நலனை முன்னிட்டு 01-05-2021 முதல் 31-05-2021 வரையுள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் ( நாள் ஒன்றுக்கு ஒரு நாளுக்கு ரூ.355/- ) மகளிர் சுயஉதவிக்குழு பணியாளர்கள் / இதர தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தி பணிபுரிய நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.28.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. செலவீனத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இம்மாநகரில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 01-05-2021 முதல் 31-05-2021 வரையுள்ள காலத்திற்கு மட்டும் தினக்கூலி அடிப்படையில் தினசரி 300 DBC பணியாளர்களை பணியமர்த்த மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 2709 / 2021)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**07)**திருப்பூர் மாநகராட்சி 01-01-2008 முதல் நகராட்சி நிலையிலிருந்து மாநகராட்சியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருவதன் பேரில், திருப்பூர் மாநகராட்சிக்கு 1996ம் வருட தமிழ்நாடு மாநகராட்சி பொது பணியமைப்பின் கீழ், அரசாணை (நிலை) எண்.207, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை நாள் 22-10-2008-ல் மூன்று உதவி ஆணையர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சியில் உதவி ஆணையர் (கணக்கு) பணியிடத்தில் திரு.எஸ்.சந்தான நாராயணன் அவர்களுக்கு அரசாணை(ப) எண்.111நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை நாள் 13-04-2017-ல் பதவி உயர்வு அளிக்கப்பட்டு நாளது தேதி வரை பணிபுரிந்து வருகிறர்.

உதவி ஆணையர் (பணியாளர்) மற்றும் உதவி ஆணையர் (வருவாய்) பணியிடங்களுக்கு தகுதி பெற்றவர்கள் ஒருவரும் இல்லாத நிலையில் மேற்படி பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து இதுநாள் வரை பூர்த்தி செய்யப்படாமல் காலியாகவே உள்ளது.

திருப்பூர் மாநகராட்சியில் கணக்கு அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.அ.செந்தில்குமார் அவர்கள் கணக்கு அலுவலராக 28-09-2018 முதல் 27-09-2020 வரை இரண்டு ஆண்டுகள் நிறைவு செய்து நாளது தேதி வரை பணிபுரிந்து வருவதாலும், உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்தினையும் 27-05-2019 முதல் நாளது தேதிவரை பொறுப்பு வகித்து வருவதாலும் தனியர் தனது 11-12-2020 நாளிட்ட விண்ணபத்தில் உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்திற்கு தமிழ்நாடு மாநகராட்சிகள் பொதுபணி விதிகள் 1998-ன்படி இரண்டு ஆண்டுகள் நிர்வாக அலுவலராக பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியினை தளர்வு செய்து திருப்பூர் மாநகராட்சியில் காலியாக உள்ள உதவி ஆணையர்(பணியாளர்) பணியிடத்தினை வழங்குமாறு கோரியுள்ளார்.

மேற்படி பணியிடங்களை 1996ம் வருட தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகளில் பொது பணிவிதிகளின் கீழ் வகுப்பு -1ல் இடம் பெறும் உதவி ஆணையர் பணியிடம் வகுப்பு-II-ல் பணியாற்றும் நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பணியிடங்களில் இருந்து கீழ்க்கண்டவாறு நிரப்பப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| Sl. No | Name of the Post | Method of Recruitment and Appointment | Qualification |
|---|---|---|---|
| I. | Assistant Commissioner<br><br>(Personnel) | i) By Promotion and transfer<br><br>ii) By transfer from the holders of the posts of Assistant Commissioner (Revenue), Assistant Commissioner (Accounts) and Assistant Commissioner ( Ward Office) | i) Must have worked not less than 2 years as Administrative Officer and<br><br>ii) Must have at least one year of Service before his age of Superannuation |
| II. | Assistant Commissioner (Revenue) | i) By Promotion from the holders of the posts in Class-II (or) | i) Must have served as Accounts officer and Assistant Revenue Officer for a period of less than two years in the post and |

| Sl. No | Name of the Post | Method of Recruitment and Appointment | Qualification |
|---|---|---|---|
| | | ii) By transfer from the holders of the posts of Assistant Commissioner (Personnel) Assistant Commissioner (Accounts), and Assistant Commissioner ( Ward Office) | ii) Must have at least one year of Service before his age of Superannuation. |
| III. | Assistant Commissioner (Accounts) | i) By Promotion from the holders of the posts in Class-II ( or)<br>ii) By transfer from the holders of the posts of Assistant Commissioner (Personnel) Assistant Commissioner, (Revenue), and Assistant Commissioner ( Ward Office)<br>iii) By deputation from the office of the Directorate of Local Fund Accounts ( or) from the Director of Treasury & Accounts | i) Must have served as Accounts Officer for a period of less than two years and.<br>ii) Must have at least one year of service before his age of Superannuation. |

இம்மாநகராட்சியில் தற்போது வகுப்பு -II-;ல் கணக்கு அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.அ.செந்தில்குமார் அவர்கள் கணக்கு அலுவலர் பணியிடத்தில் 28-09-2018 முதல் 27-09-2020வரை இரண்டு ஆண்டுகள் முடித்து நாளது தேதிவரை கணக்கு அலுவலராக பணிபுரிந்து வருகிறார். மேலும் உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்திலும் கடந்த இரண்டு வருடங்களாக பொறுப்பு வகித்து வருவதால் அப்பணியிடத்தில் தனியர் போதிய முன் அனுபவம் பெற்றுள்ளார்.

எனவே மாநகராட்சி பணிவிதிகளின்படி உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க நிர்வாக அலுவலராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்கிற விதியினை தளர்வு செய்து திருப்பூர் மாநகராட்சியில் கணக்கு அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.அ.செந்தில்குமார் அவர்களுக்கு உதவி ஆணையர்(பணியாளர்) பணியிடத்தினை வழங்குமாறு அரசிடம் கோரலாம் என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. 1981 ஆம் வருடத்திய கோவை மாநகராட்சி சட்டம் 106 (1) (2), (a) - இன்படி உதவி ஆணையர் பணியிடமானது அரசால் நியமனம் செய்யப்பட வேண்டிய பணியிடமாகும். எனவே தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகள் 1996-ன் கீழ் வகுப்பு-1, வகை-3--ல் இடம் பெற்றுள்ள உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க தகுதி வாய்ந்தோர் பெயர் பட்டியல் ( Panel) வெளியிடவும் , பதவி உயர்வு வழங்கவும் அரசிற்கே அதிகாரம் உள்ளது.
2. உதவி ஆணையர் பணியிடமானது அரசால் நியமனம் செய்யப்பட வேண்டிய பணியிடமாகும். மேற்படி உதவி ஆணையர் ( பணியாளர்) ஆக பதவி உயர்வு வழங்குவதற்கு நிர்வாக அலுவலராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்கிற விதி உள்ளது. தனியர் திரு.செந்தில்குமார் கணக்கு

**07-ன் தொடர்ச்சி**

அலுவலராக 28-09-2018 முதல் நாளது தேதி வரை பணிபுரிந்து 27-09-2020 அன்று இரண்டு ஆண்டுகள் பூர்த்தி செய்துள்ளார். மேலும் கூடுதலாக உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்திற்கு பிரதிநிதி உத்திரவு ( Delegation of Power) வழங்கப்பட்டு 27-05-2019 முதல் இரண்டு வருடங்களாக மாசற்ற முறையில் திறம்பட பணி செய்து உதவி ஆணையர் ( பணியாளர்) பணியிடத்திற்கு உரிய தகுதி பெற்றுள்ளார்.

3. எனவே உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கு நிர்வாக அலுவலர் பணியிடத்தில் இரண்டு ஆண்டுகள் பணி நிறைவு செய்ய வேண்டும் என்ற விதியினை தளர்வு செய்து திரு அ. செந்தில்குமார் கணக்கு அலுவலரை ரூ.15600-39100 தர ஊதியம் ரூ.5700/- அதற்கு இணையான 7-வது ஊதியக்குழுவின் ( Matrix Level 23) ரூ.56900 -180500 என்ற ஊதிய ஏற்ற முறையில் உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்திற்கு பதவி உயர்வு அளித்து நியமனம் செய்வதற்கு அரசிடம் கோர மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம். ( சி.1 / 7364 / 2021)

-------

**தீர்மானம்** :1)1981ஆம் வருடத்திய கோவை மாநகராட்சி சட்டம் 106(1) (2),(a) -இன் படி உதவிஆணையர் பணியிடமானது அரசால் நியமனம் செய்யப்பட வேண்டிய பணியிடமாகும் எனவே தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகள் 1996-ன் கீழ் வகுப்பு-1, வகை-3--ல் இடம் பெற்றுள்ள உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க தகுதி வாய்ந்தோர் பெயர் பட்டியல் (Panel)வெளியிடவும், பதவிஉயர்வு வழங்கவும் அரசிற்கே அதிகாரம் உள்ளது.

2)உதவி ஆணையர் பணியிடமானது அரசால் நியமனம் செய்யப்பட வேண்டிய பணியிடமாகும். மேற்படி உதவி ஆணையர் ( பணியாளர்) ஆக பதவி உயர்வு வழங்குவதற்கு நிர்வாக அலுவலராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்கிற விதி உள்ளது. தனியர் திரு அ செந்தில்குமார் கணக்கு அலுவலராக 28-09-2018 முதல் நாளது தேதி வரை பணிபுரிந்து 27-09-2020 அன்று இரண்டு ஆண்டுகள் பூர்த்தி செய்துள்ளார். மேலும் கூடுதலாக உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்திற்கு பிரதிநிதி உத்திரவு ( Delegation of Power) வழங்கப்பட்டு 27-05-2019 முதல் இரண்டு வருடங்களாக மாசற்ற முறையில் திறம்பட பணி செய்து உதவி ஆணையர் ( பணியாளர்) பணியிடத்திற்கு உரிய தகுதி பெற்றுள்ளார்

3)எனவே உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்குநிர்வாக அலுவலர் பணியிடத்தில் இரண்டு ஆண்டுகள் பணி நிறைவு செய்ய வேண்டும் என்ற விதியினை தளர்வு செய்து திரு அ.செந்தில்குமார் கணக்கு அலுவலரை ரூ.15600-39100 தர ஊதியம் ரூ.5700/- அதற்கு இணையான 7-வது ஊதியக்குழுவின் (Matrix Level 23) ரூ.56900 -180500 என்ற ஊதிய ஏற்ற முறையில் உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்திற்கு பதவி உயர்வு அளித்து நியமனம் செய்வதற்கு அரசிடம் கோர மாமன்றம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

-------

**08)** திருப்பூர் மாநகராட்சி 01-01-2008 முதல் நகராட்சி நிலையிலிருந்து மாநகராட்சியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருவதன் பேரில், திருப்பூர் மாநகராட்சிக்கு 1996ம் வருட தமிழ்நாடு மாநகராட்சி பொது பணியமைப்பின் கீழ், பார்வை 2ல் கண்டுள்ள அரசாணை (நிலை) எண்.207, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை நாள் 22-10-2008-ல் மூன்று உதவி ஆணையர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சியில் உதவி ஆணையர் (கணக்கு) பணியிடத்தில் திரு.எஸ்.சந்தான நாராயணன் என்பவருக்கு அரசாணை (ப) எண்.111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை நாள் 13-04-2017-ல் பதவி உயர்வு அளிக்கப்பட்டு நாளது தேதி வரை பணிபுரிந்து வருகிறார்.

உதவி ஆணையர் (பணியாளர்) மற்றும் உதவி ஆணையர் ( வருவாய்) பணியிடங்களுக்கு தகுதி பெற்றவர்கள் ஒருவரும் இல்லாத நிலையில் மேற்படி பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து இதுநாள் வரை பூர்த்தி செய்யப்படாமல் காலியாகவே உள்ளது.

மேற்படி பணியிடங்களை 1996ம் வருட தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகளில் பொது பணிவிதிகளின் கீழ் வகுப்பு -1ல் இடம் பெறும் உதவி ஆணையர் பணியிடம் வகுப்பு-II-ல் பணியாற்றும் நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பணியிடங்களில் இருந்து கீழ்க்கண்டவாறு நிரப்பப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| Sl. No | Name of the Post | Method of Recruitment and Appointment | Qualification |
|---|---|---|---|
| I. | Assistant Commissioner<br>(Personnel) | i) By Promotion<br><br>ii) By transfer from the holders of the posts of Assistant Commissioner (Revenue), Assistant Commissioner (Accounts) and Assistant Commissioner ( Ward Office) | i) Must have worked not less than 2 years as Administrative Officer and<br><br>ii) Must have at least one year of Service before his age of Superannuation |
| II. | Assistant Commissioner (Revenue) | i) By Promotion from the holders of the posts in Class-II (or)<br><br>ii) By transfer from the holders of the posts of Assistant Commissioner (Personnel) Assistant Commissioner (Accounts), and Assistant Commissioner ( Ward Office) | i) Must have served as Accounts officer and Assistant Revenue Officer for a period of less than two years in the post and<br><br>ii) Must have at least one year of Service before his age of Superannuation. |

| Sl. No | Name of the Post | Method of Recruitment and Appointment | Qualification |
|---|---|---|---|
| III. | Assistant Commissioner (Accounts) | i) By Promotion from the holders of the posts in Class-II ( or)<br>ii) By transfer from the holders of the posts of Assistant Commissioner (Personnel) Assistant Commissioner, (Revenue), and Assistant Commissioner ( Ward Office)<br>iii) By deputation from the office of the Directorate of Local Fund Accounts ( or) from the Director of Treasury & Accounts | i) Must have served as Accounts Officer for a period of less than two years and.<br>ii) Must have at least one year of service before his age of Superannuation. |

இம்மாநகராட்சிக்கு தோற்றுவிக்கப்பட்டஉதவி ஆணையர் (பணியாளர்) நிர்வாகம் மற்றும் வருவாய் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து காலியாக உள்ளது.

மாநகராட்சி பணிவிதிகளின்படி உதவி ஆணையர் (வருவாய்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கு கணக்கு அலுவலர் மற்றும் உதவி வருவாய் அலுவலராக இரண்டாண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும்.

இம்மாநகராட்சியில் தற்போது வகுப்பு -II-;ல் கணக்கு அலுவலராக பணிபுரியும் திரு.கா.மாரிமுத்து கணக்கு அலுவலர் பணியிடத்தில் இரண்டு வருடங்களாக மாசற்ற முறையில் திறம்பட பணிசெய்து உரிய தகுதி பெற்றுள்ளார்.

எனவே திரு.கா.மாரிமுத்து கணக்கு அலுவலருக்கு உதவி ஆணையர்(வருவாய்) ஆக பதவி உயர்வு அளிப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகள் 1996-ன் கீழ் பணிவிதிகள் வகுப்பு 1ல் வகை 4-ல் இடம் பெறும் உதவி ஆணையர் (வருவாய்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க தகுதி வாய்ந்தோர் பட்டியல் ( Pannel) வெளியிடவும் , பதவி உயர்வு வழங்க அரசிற்கே அதிகாரம் உள்ளதால் திரு.கா.மாரிமுத்து கணக்கு அலுவலரை உதவி ஆணையர்(வருவாய்) ஆக பதவி உயர்வு வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. எனவே உதவி ஆணையர் (வருவாய்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கு திரு.கா.மாரிமுத்து கணக்கு அலுவலரை ரூ.15600-39100 தர ஊதியம் ரூ.5700/- அதற்கு இணையான 7-வது ஊதியக்குழுவின் ( Matrix Level 23) ரூ.56900 -180500 என்ற ஊதிய ஏற்ற முறையில் உதவி ஆணையர் (வருவாய்) பணியிடத்திற்கு பதவி உயர்வு அளித்து நியமனம் செய்வதற்கும் மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

( சி.1 / 2217 / 2021)

-------

<u>08-ன் தொடர்ச்சி</u>

**தீர்மானம் : 1)** தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகள் 1996-ன் கீழ் பணிவிதிகள் வகுப்பு 1ல் வகை 4-ல் இடம் பெறும் உதவி ஆணையர் (வருவாய்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க தகுதி வாய்ந்தோர் பட்டியல் ( Pannel) வெளியிடவும் , பதவி உயர்வு வழங்க அரசிற்கே அதிகாரம் உள்ளதால் திரு கா மாரிமுத்து கணக்கு அலுவலரை உதவி ஆணையர் (வருவாய்) ஆக பதவி உயர்வு வழங்க மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டது

2)எனவே உதவி ஆணையர் (வருவாய்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கு திரு கா மாரிமுத்து கணக்கு அலுவலரை ரூ.15600-39100 தர ஊதியம் ரூ 5700/- அதற்கு இணையான 7-வது ஊதியக்குழுவின் ( Matrix Level 23) ரூ 56900 -180500 என்ற ஊதிய ஏற்ற முறையில் உதவி ஆணையர் (வருவாய்) பணியிடத்திற்கு பதவி உயர்வு அளித்து நியமனம் செய்வதற்கும் மாமன்றம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

- - - -

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

‘

உதவி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி

# திருப்பூர் மாநகராட்சி

**2021ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**09)** திருப்பூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தூய்மைப் பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் 1580 தூய்மைப் பணியாளர்களை வெளிச்சந்தை மூலம் (Outsourcing ) ஒப்பந்த அடிப்படையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் அமர்த்தி கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண் K.Dis.No. 28369/J3/2018நாள் 13-11-2018ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

இம்மாநகரட்சி மாமன்ற தீர்மானம் எண்.427, நாள் 24-01-2019-ல் இம்மாநகராட்சி பணியாளர்களின் ஆண்டு ஊதிய செலவீனம் 49% மிகாமல் 1580 தூய்மைப் பணியாளர்களை வெளிச்சந்தை மூலம் ஒப்பந்த முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் Tamilnadu Transparency in Tender Act & Rules 2000யின்படி ஒப்பந்தப்புள்ளி பெற்று மாமன்றத்தின் அனுமதி பெற்று அமர்த்திக் கொள்ளவும், அமர்த்தப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை அவர்களின் முழுவிபரம், வழங்கப்படும் ஊதியம் மற்றும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து சலுகை கட்டணங்களையும் கணக்கிட்டு வழங்க ஒப்பந்ததாரரை முழு பொறுப்பாக்கியும் மற்றும் ஒப்பந்ததாரர்க்குரிய சேவைக் கட்டணம் தொகையினை கணக்கீடு செய்யவும் மற்றும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள Weight based contracting SWM பணிகளை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும் மேலும் காலி ஏற்படும் பணியிடங்களில் வெளிச்சந்தை மூலம் ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே பணியமர்த்தப்பட வேண்டும் எனவும் எக்காரணத்தை கொண்டும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களை தவிர கூடுதலாக பணியமர்த்தக் கூடாது என தெரிவிக்கப்பட்ட நிலையில் இம்மாநகராட்சியில் நுண்உரமாக்கல் மையத்திற்கு தேவைப்படும் 1580 தூய்மை பணியாளர்களை அமர்த்திக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

‘ இதனை தொடர்ந்து மண்டலம் 1-க்கு 426 தூய்மை பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் தற்காலிகமாக பணி அமர்த்த மாவட்ட ஆட்சித்தலைவர் திருப்பூர் அவர்களின் செயல்முறை உத்திரவின்படி தூய்மை பணியாளர் நபர் ஒன்றுக்கு தினசரி அடிப்படை ஊதியம் ரூ.510/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரு நபருக்கு அடிப்படை ஊதியம் ரூ.510/-, PF - 12% வீதம் நாள் ஒன்றுக்கு ரூ.61.20, ESI - 3.25% வீதம் நாள் ஒன்றுக்கு ரூ.16.58 பாதுகாப்பு உபகரணங்கள் நாள் ஒன்றுக்கு ரூ.9.59, சீருடை செலவீனம் நாள் ஒன்றுக்கு ரூ.3.29 நிர்வாக கட்டணம் 10% சதவீதம் நாள் ஒன்றுக்கு ரூ.60.07 GST வரி 18% ரூ.10.81 ஆக மொத்தம் ரூ.**671.53** அதன்படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு அனைத்து படிகளும் உட்பட ஊதியம் ரூ.**672/-** வீதம் ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு ஊதியம் ரூ.**20,832/-**, 426 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.**88,74,432/-** மற்றும் 426 நபர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு ( 365 நாட்கள்) ஊதியம் மொத்தம் **ரூ.10,44,89,280/-** ஆகும்.

09-ன் தொடர்ச்சி

மேற்கண்டுள்ளபடி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பொது சுகாதார நலனை முன்னிட்டு அவசர அவசியம் கருதி மண்டலம் எண். 1-க்குட்பட்ட பகுதிகளில் 426 தூய்மை பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் ( Outsoourcing) 01-07-2021 முதல் 30-06-2022 வரையுள்ள ஒரு வருட காலங்களுக்கு பணி அமர்த்திக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.1045 இலட்சத்திற்கும் மற்றும் மேற்படி பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும் மேற்படி ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ய உத்தேச செலவீனம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

**அ)** இம்மாநகராட்சியில் தூய்மை பணியாளர்கள் பற்றாக்குறையினை கருத்திற்கொண்டும் பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசியம் கருதி மேற்படி பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் பணியமர்த்த மாமன்றம் அனுமதி வழங்கலாம்.‘

**ஆ)** மேற்படி பணியாளர்களை பணியமர்த்த ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1045/- இலட்சத்திற்கு தினசரி நாளிதழ் விளம்பர உத்தேச கட்டணம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (எச்1/2701/2021)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது**.

--------

**10)** திருப்பூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தூய்மைப் பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் 1580 தூய்மைப் பணியாளர்களை வெளிச்சந்தை மூலம் (Outsourcing ) ஒப்பந்த அடிப்படையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் அமர்த்தி கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண் K.Dis.No.28369/J3/2018 நாள் 13-11-2018ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

இம்மாநகரட்சி மாமன்ற தீர்மானம் எண்.427, நாள் 24-01-2019-ல் இம்மாநகராட்சி பணியாளர்களின் ஆண்டு ஊதிய செலவீனம் 49% மிகாமல் 1580 தூய்மைப் பணியாளர்களை வெளிச்சந்தை மூலம் ஒப்பந்த முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் Tamilnadu Transparency in Tender Act & Rules 2000யின்படி ஒப்பந்தப்புள்ளி பெற்று மாமன்றத்தின் அனுமதி பெற்று அமர்த்திக் கொள்ளவும், அமர்த்தப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை அவர்களின் முழுவிபரம், வழங்கப்படும் ஊதியம் மற்றும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து சலுகை கட்டணங்களையும் கணக்கிட்டு வழங்க ஒப்பந்ததாரரை முழு பொறுப்பாக்கியும் மற்றும் ஒப்பந்ததாரர்க்குரிய சேவைக் கட்டண தொகையினை கணக்கீடு செய்யவும் மற்றும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள Weight based contracting SWM பணிகளை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும் மேலும் காலி ஏற்படும் பணியிங்களில் வெளிச்சந்தை மூலம் ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே பணியமர்த்தப்பட வேண்டும் எனவும் எக்காரணத்தை கொண்டும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களை தவிர கூடுதலாக பணியமர்த்தக் கூடாது என தெரிவிக்கப்பட்ட நிலையில் இம்மாநகராட்சியில் நுண்உரமாக்கல் மையத்திற்கு தேவைப்படும் 1580 தூய்மை பணியாளர்களை அமர்த்திக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

‘ இதனை தொடர்ந்து மண்டலம் 4-க்கு 402 தூய்மை பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் தற்காலிகமாக பணி அமர்த்த மாவட்ட ஆட்சித்தலைவர்

10-ன் தொடர்ச்சி

திருப்பூர் அவர்களின் செயல்முறை உத்திரவின்படி தூய்மை பணியாளர் நபர் ஒன்றுக்கு தினசரி அடிப்படை ஊதியம் ரூ.510/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.அதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரு நபருக்கு அடிப்படை ஊதியம் ரூ.510/-,PF - 12% வீதம் நாள் ஒன்றுக்கு ரூ.61.20, ESI - 3.25% வீதம் நாள் ஒன்றுக்கு ரூ.16.58 பாதுகாப்பு உபகரணங்கள் நாள் ஒன்றுக்கு ரூ.9.59, சீருடை செலவீனம் நாள் ஒன்றுக்கு ரூ.3.29 நிர்வாக கட்டணம் 10% சதவீதம் நாள் ஒன்றுக்கு ரூ.60.07 GST வரி 18% ரூ.10.81 ஆக மொத்தம் ரூ.**671.53** அதன்படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு அனைத்து படிகளும் உட்பட ஊதியம் ரூ.**672/-** வீதம் ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு ஊதியம் ரூ.**20,832/-**, 402 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.**88,74,464/-** மற்றும் 402 நபர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு ( 365 நாட்கள்) ஊதியம் மொத்தம் **ரூ.9,86,02,560/-** ஆகும்.

மேற்கண்டுள்ளபடி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பொது சுகாதார நலனை முன்னிட்டு அவசர அவசியம் கருதி மண்டலம் எண். 4-க்குட்பட்ட பகுதிகளில் 402 தூய்மை பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் ( Outsoourcing) 01-07-2021 முதல் 30-06-2022வரையுள்ள ஒரு வருட காலங்களுக்கு பணி அமர்த்திக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.987 இலட்சத்திற்கும் மற்றும் மேற்படி பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும் மேற்படி ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ய உத்தேச செலவீனம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

**அ)** இம்மாநகராட்சியில் தூய்மை பணியாளர்கள் பற்றாக்குறையினை கருத்திற்கொண்டும் பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசியம் கருதி மேற்படி பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் பணியமர்த்த மாமன்றம் அனுமதி வழங்கலாம்.‘

**ஆ)** மேற்படி பணியாளர்களை பணியமர்த்த ஆகும் உத்தேச செலவீனம் ரூ.987/- இலட்சத்திற்கு தினசரி நாளிதழ் விளம்பர உத்தேச கட்டணம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (எச்1/2700/2021)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

--------

**11)** திருப்பூர் மாநகராட்சியில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினர் (NTADCL) மூலம் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்பட்டு கடந்த 2009 செப்டம்பர் முதல் பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 119 கி.மீ. நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. (Gravity Collection System) இதில் ஒரு பகுதியாக திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.2, வார்டு எண்.27-க்குட்பட்ட பாரதி நகரில் கழிவுநீரேற்று நிலையம் (SPS-3) அமைக்கப்பட்டு வார்டு எண்கள்.8, 9, 10, 26 மற்றும் 27 ஆகிய பகுதிகளில் தினசரி சேகரமாகும் பாதாள சாக்கடைத் திட்ட கழிவுநீரை மேற்கண்ட SPS-3 யிலிருந்து 3500 மீட்டர் தூரம் Pumping செய்யப்பட்டு வார்டு எண்.31-ல் மின்மயானம் அருகில் உள்ள ஒருங்கிணைந்த SPS-4க்கு கொண்டு சென்று பின்பு STPக்கு Pumpimg செய்யப்பட்டு சுத்திகரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**11-ன் தொடர்ச்சி**

இதில் பாரதிநகர் SPS-3--யிலிருந்து கொங்கு பிரதான சாலையில் அமைக்கப்பட்டுள்ள Manhole – 94 வரை 500mm விட்டமுள்ள கண்ணாடி இழை (GRP) குழாய் மூலம் Pumping Main ஆக 1272 மீட்டர் தூரமும், மேற்கண்ட Manhole எண்.94-லிருந்து கொங்கு பிரதான சாலை வழியாக ஊத்துக்குளி சாலையை கடந்து SPS-4 வரை 600mm விட்டமுள்ள RCC குழாய் மூலம் Gravity Collection System ஆக 2228 மீட்டர் தூரமும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேற்கண்ட கொங்கு பிரதான சாலையில் பதிக்கப்பட்டுள்ள RCC குழாயில் பாதியளவு மட்டுமே நீரோட்டம் உள்ளதினால் Oxidizing of H2S gas-ன் எதிர்வினை காரணமாக மேற்பரப்பில் அரிப்பு ஏற்பட்டு குழாய் அடிக்கடி உடைந்து சாலையில் கழிவுநீர் வழிந்தோடுகிறது. அவ்வப்பொழுது மாநகராட்சி பொது நிதியின் மூலம் உடைந்த பகுதியை மட்டும் சரி செய்யப்படுகிறது. முழுவதையும் மாற்றி அமைக்கும்அளவிற்கு மாநகராட்சியில் நிதி ஆதாரம் இல்லை என்பதாலும்,

மேலும் தற்சமயம் மேற்கண்ட சாலையில் மிடுக்கான நகரத் திட்டத்தின் (Smart City Mission) கீழ் கொங்கு பிரதான சாலையை கான்கீரீட் சாலையாக மாற்றி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதினால் எதிர்வரும் காலங்களில் குழாய் உடைந்தால் சரி செய்ய முடியாத நிலை ஏற்படுவதை கருத்தில் கொண்டு 600mm விட்டமுள்ள CI குழாய்கள் மிடுக்கான நகரத் திட்ட பணிகள் ( Smart City Mission) நடைபெற்று வரும் பகுதியில் மட்டுமே 1500மீ தூரம் மாற்றி அமைக்க 2020-2021ம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விலைப்புள்ளியின் அடிப்படையில் ரூ.3.80 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணியினை சிறப்பினமாக கருதி செயல்படுத்த உரிய திட்டத்தில் நிதி வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதி வழங்கலாம் (இ1/1624/2021/ம.2)

-------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

--------

**12)** திருப்பூர் மாநகராட்சியில் கீழ்க்கண்ட 3 பணிகளுக்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டதையடுத்து 21-04-2020 அன்று மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணி உத்திரவு காலம் 30-04-2021 உடன் முடிவடைகிறது. ஒப்பந்ததாரர், ஒப்புதல் அளித்துள்ளதன் பேரிலும், தமிழக சட்டமன்ற தேர்தல் கட்டுப்பாட்டு விதிகள் காரணமாக புதிய ஒப்பந்தப்புள்ளி கோர இயலாததாலும், மீண்டும் அதே விலை விகிதத்தில் 01-05-2021 முதல் 31-06-2021 வரை இரண்டு மாத காலத்திற்கு பணி மேற்கொள்ள மேற்படி நிறுவனத்தாருக்கு அதே ஒப்பந்த நிபந்தனைகளின்படி கால நீட்டிப்பு உத்திரவு வழங்கலாம்.

| வ.எண். | பணியின் பெயர் |
|---|---|
| 1. | திருப்பூர் மாநகரட்சிக்கு உட்பட்ட 12 நீரேற்று நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள குளோரினேற்ற கருவிகள் இரண்டு மாத காலத்திற்கு பராமரிப்பு செய்தல் |
| 2. | திருப்பூர் மாநகரட்சிக்கு உட்பட்ட 12 நீரேற்று நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள குளோரினேற்ற கருவிகள் இரண்டு மாத காலத்திற்கு பராமரிப்பு செய்தல் |
| 3. | திருப்பூர் மாநகரட்சிக்கு உட்பட்ட 11 நீரேற்று நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள குளோரினேற்ற கருவிகள் இரண்டு மாத காலத்திற்கு பராமரிப்பு செய்தல் |

**<u>12-ன் தொடர்ச்சி</u>**

மேற்காண் 35 குளோரினேற்ற கருவிகளை பராமரிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.70 இலட்சத்திற்கு ஆணையர் அவர்களின் அதிகாரத்திற்குட்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாமன்றம் பதிவு செய்யலாம். (இ.1/3316 / 2021)

-------

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**.

--------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

‘

உதவி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி

# திருப்பூர் மாநகராட்சி

**2021ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**13)** திருப்பூர் மாநகராட்சிக்கு எதிராக உள்ளூர் நீதிமன்றங்களில் தொடரப்படும் வழக்குகளுக்கு மாநகராட்சி சார்பாக வழக்காடவும், சட்ட ஆலோசனைகள் வழங்கவும் நிலையான வழக்கறிஞர் ( Standing Counsel) ஒருவரை நியமனம் செய்ய வேண்டியுள்ளது. ஏற்கனவே உள்ள மாநகராட்சி சட்ட ஆலோசகர் 2001-ம் ஆண்டு முதல் தொடர்ந்து பணி செய்து வருவதால் புதிய சட்ட ஆலோசகர் ஒருவரை தேர்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

எனவே வழக்கறிஞர்களின் சங்கத்தில் பதிவு செய்தவர்களை திருப்பூர் மாநகராட்சிக்கு நிலையான வழக்கறிஞராக நியமனம் செய்வது தொடர்பாக வயது, கல்வி, மற்றும் இதர தகுதிகள் 6 ஆண்டு காலத்திற்கு குறையாமல் பணியில் பார்கவுன்சில் உறுப்பினராக உள்ளவர்கள் குறித்த விபரங்களை பெற்று நியமனம் செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதிக்கலாம். ( சி.1 / 2803 / 2021 )

--------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**14)** திருப்பூர் மாநகராட்சியில் சீர்மிகு நகர ( Smart City Project) திட்டத்தின் கீழ் இடுவாய் கிராமத்தில் 2.0 மெகாவாட் திறன் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி மூல மதிப்பீட்டில் வழிவகை செய்யாத 13 பணி இனங்கள் கூடுதலாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, கூடுதலாக மேற்கொள்ள வேண்டிய 13 இனங்களையும் முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களிடம் சமர்ப்பித்து விலை விகிதத்திற்கு ஒப்புதல் பெற மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மேற்கண்ட திட்டப் பணியின் அவசியம் கருதி கூடுதலாக 13 இனங்களை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியில் கூடுதல் 13 இனங்களுக்கான விலைவிகிதம் நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மைப் பொறியாளர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அங்கீகாரம் பெற மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(TSCL / E1 / 0793 / 2019)

-----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**15)** திருப்பூர் மாநகராட்சியில் சீர்மிகு நகர ( Smart City Project) திட்டத்தின் கீழ் இடுவாய் கிராமத்தில் 4.8 மெகாவாட் திறன் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி மூல மதிப்பீட்டில் வழிவகை செய்யாத 18 பணி இனங்கள் கூடுதலாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, கூடுதலாக மேற்கொள்ள வேண்டிய 18 இனங்களையும் முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களிடம் சமர்ப்பித்து விலை விகிதத்திற்கு ஒப்புதல் பெற மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. மேற்கண்ட திட்டப் பணியின் அவசியம் கருதி கூடுதலாக 18 இனங்களை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியில் கூடுதல் 18 இனங்களுக்கான விலைவிகிதம் நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மைப் பொறியாளர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அங்கீகாரம் பெற மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(TSCL / E1 / 6630 / 2019)

-----

**தீர்மானம்** : **அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது**.

--------

**16)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரம் மண்டலம் 1ல் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் காம்பாக்டர் லாரி வாகனம் எண். TN 39 CK 7194-க்கு தகுதி சான்று முடிவடைந்த நிலையில் தகுதி சான்று புதுப்பிக்க அதற்கான மராமத்து பணிகள் பார்க்க தமிழ்நாடு மோட்டார வாகன பராமரிப்புத் துறை, வேளச்சேரி சென்னை அவர்களின் கடித ந.க.எண். ஆ4 /. 11577 / 18-2 Major பழுது 2018-2020 நாள் 21-12-2018ம் கடிதத்தின்படி அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையான ABT Industriess Limited, பல்லடம் என்ற நிறுவனத்தில் அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு வாகனத்தில் உள்ள பழுதுகளை நேரடியாக ஆய்வு செய்து அதற்கான விலைப்புள்ளி ரூ.98,192/- என பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வாகனத்தில் உள்ள மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கும் மற்றும் செலவீனத்திற்கும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக இருப்பதால் இதற்கு மாநகராட்சி ஆணையர் / தனி அலுவலர் அவர்களால் 18-05-2021ந் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வாகனத்தினை பழுது நீக்கம் செய்து தகுதி சான்று புதுப்பிக்கத் தேவையான பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் இதற்காகும் விலைப்புள்ளி தொகையான ரூ.98,192/-க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாமன்றம் அனுமதிக்கலாம். (எச்.1 / 2659 / 2020 )

-------

**தீர்மானம்** : **அனுமதி வழங்கப்பட்டது**.

--------

**17)** திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் மற்றும் அலுவலர் இல்லங்களுக்கு 2021-2022 ஆம் ஆண்டுக்கு தினசரி செய்தி நாளிதழ் கொள்முதல் செய்து கொள்ள உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அனுமதிக்கலாம். ( அ1 / 1270 / 2020)

-------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது**.

--------

**18)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.3-ல் வார்டு எண்.44-க்குட்பட்ட மிஷின் வீதி பகுதியில் கதவு எண்.47-ல் வசிக்கும் S. காமிலா க/பெ. அப்துல் சுக்கூர் என்பவர் அவர்களது வீட்டுக் குடிநீர் இணைப்பு எண்.032/44996739-க்கு கூடுதல் வைப்புத் தொகையாக ரூ.5000/-ஐ தவறுதலாக இரண்டு தரம் செலுத்தியுள்ளார். ஆகவே மொத்தமாக ரூ.10,000/- செலுத்தியுள்ளார். எனவே தவறுதலாக இரண்டாம் முறை செலுத்திய தொகை ரூ.5000/-ஐ திரும்ப வழங்குமாறு மனுதாரர் கோரியுள்ளதன் பேரில், கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையினை திரும்ப வழங்குதல் குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாமன்றம் அனுமதிக்கலாம்.

( இ3/228/2019/ம.3)

--------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது**.

--------

**19)** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-5 அவர்களின் கடித எண்.8009 / ஜே1 / 2016 நாள் 28-03-2016 மற்றும் தலைமை செயலர், தலைமை செயலகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 32298 / பி1 /2016 நாள் 21-03-2019ன் படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது,.

எனவே பார்வையில் கண்டுள்ள உத்திரவுகளின்படி 300 குடும்பங்களுக்கு ஒரு கொசு தடுப்பு பணியாளர் (DBC) வீதம் தற்காலிகமாக நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் 60 வார்டு பகுதிகளிலும் கொசு தடுப்பு பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும் தற்போது டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்த தினமும் மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல் பெறப்பட்டு ஆறுநாள் வட்ட சுழற்சி அடிப்படையில் பணிபுரிய ஏதுவாக மண்டலம் 1-க்கு 75 நபர்கள், மண்டலம் 2-க்கு 75 நபர்கள், மண்டலம் 3-க்கு 75 நபர்கள் மற்றும் மண்டலம் 4-க்கு 75 நபர்கள் வீதம் நான்கு மண்டலங்களுக்கு தினசரி மொத்தம் 300 DBC பணியாளர்களை அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு 01-06-2021 முதல் 30-06-2021 வரையுள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் (நாள் ஒன்றுக்கு ஒரு நாளுக்கு ரூ.355/-) மகளிர் சுயஉதவிக்குழு பணியாளர்கள் . இதர தற்காலிக பணியாளர்களை கொண்டு

**19-ன் தொடர்ச்சி**

மேற்படி பணிக்கு அமர்த்தி பணிபுரிய நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.28.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

.**அலுவலகக் குறிப்பு** :

1. செலவீனத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இம்மாநகரில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 01-06-2021 முதல் 30-06-2021 வரையுள்ள காலத்திற்கு மட்டும் தினக்கூலி அடிப்படையில் தினசரி 300DBC பணியாளர்களை பணியமர்த்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

( எச்.1 / 2709 / 2021)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது**.

--------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

‘

உதவி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி